# மக்கள் தொகை, குடியிருப்பு கணக்கெடுப்பு அவசியம் ஏன்?



டத்தோ டாக்டர் டெனிசன்

**மலேசியாவில் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் குடியிருப்பு இவ்வாண்டு தொடங்கவிருக்கிறது. இக்கணக்கெடுப்பு தேசிய அளவில் வரும் ஜூலை மாதம் 6ஆம் தேதி தொடங்கி ஆகஸ்ட் 22ஆம் தேதி நிறைவடையும்.**

இப்பணி தேசிய அளவில் 48 நாள்கள் நடைபெறும். இந்த கணக்கெடுப்பு, புள்ளி விவரம் மற்றும் ஆய்வின் முக்கிய நோக்கம் இந்நாட்டிலுள்ள துல்லியமான மக்கள் தொகை ,குடியிருப்பு, இனம், வயது, பொருளாதார நிலை, சமூக நிலை, குடும்ப வருமானம், தொழில், பிள்ளைகள், கல்வித்தரம், அடிப்படை வசதிகள், வாழ்வாதாரம் போன்ற விவரங்கள் ஆராயப் படும் என்பதே இதன் முக்கிய நோக்கமாகும் என்று மக்கள் தொகை மற்றும் புள்ளி விவர இலாகாவின் துணை இயக்குநர் துரைராஜு சுப்பன் பத்திரிகையாளர் சந்திப்புக் கூட்டத்தில் தெரிவித்தார்..

10 ஆண்டுகளுக்கு ஒரு முறை பெரும்பாலான நாடுகளில் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணி நடைபெறுகிறது. மலேசியாவில் இது "சென்சஸ்' வரிசையில் 5-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு ஆண்டாகும். இப்பணியில் அதிகார அட்டைகளுடன் கணக்கெடுப்பு அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவர். இந்த கணக்கெடுப்புப் பணியில் அனைத்து மலேசியர்களும் முழு மனதுடன் ஒத்துழைப்பு அளித்து உரிய தகவலை அளிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மக்கள் தொகை மற்றும் குடியிருப்பு கணக்கெடுப்பு என்பது மிகவும் முக்கியமான பணியாகும். இது நாட்டுக்கும் அவசியம். அதேபோல நாட்டு மக்களுக்கும் மிக அவசியமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு:-

இக்கணக்கெடுப்பில் மலேசியர்களின் ஒத்துழைப்பு எப்படி இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்..?



தனபாலன்

மக்கள் தொகை கணக்கெடுப்பில், போதுமான தகவல்களை திரட்ட விலாவாரியாக புள்ளி விவர அதிகாரிகள் திரட்டவேண்டும். ஆகவே மலேசியர்கள் போதிய விழிப்புணர்வு பெறுவதுடன் ஒத்துழைப்பும் தரவேண்டும். வீடு தேடி வரும் புள்ளி விவர அதிகாரிகளுடன் தங்களின் உண்மை நிலவரங்களையும், பாரத்தில் உள்ள கேள்விகளுக்கு தக்க பதில்களையும் வழங்க வேண்டும். இந்த புள்ளி விவரங்கள் படித்தவர்கள்- பாமரர் முதற் கொண்டு கணக்கில் கொள்ளப்படும். அது மட்டுமல்ல இந்நாட்டில் குடியுரிமை பெற்றவர்கள்- குடியுரிமை பெறாதவர்கள் -



துரைராஜு

மலேசியாவில் வசிப்பவர்கள்- பஸ் நிலையங்களில் படுத்திருப்பவர்கள் - நாதியற்றவர்கள்- பிச்சைக்காரர்கள் வரை இந்த கணக்கெடுப்பில் அடங்குவர் என்பதையும் அறிய வேண்டும். (குடியிருக்க இல்லாதவர்கள், பஸ் மற்றும் இரயில் நிலையங்களில் படுத்து உறங்குபவர்கள், இவர் களுக்கு ஜூலை 7ஆம் தேதி 12.01 அதிகாலை தொடங்கி 7.30 காலை வரை புள்ளிவிவரங்கள் ஆங் காங்கே சேகரிக்கப்படும்.இதில் மூன்று முக்கிய அம்சமாக கருதப் படவேண்டியது குடியிருப்பு விவரம், வீட்டிலுள்ள பொருட்களின் விவரம் மற்றும் வீட்டிலுள்ள உறுப்பினர்கள் விவரம் முக்கிய சாராம்சமாகும்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு ஏன் அவசியமாகிறது?

இந்தக் கணக்கெடுப்பு மக்கள் தொகையின் விரிவான தகவல் ஆதாரமாக அமையும். நாட்டின் பாதுகாப்பு, அரசின் திட்டங்கள், சேவைகள் போன்ற விரும்பிய இலக்கை அடைய, திட்டங்களை மேம்படுத்த இந்தப் பணி உதவும்' என்று இந்த கணக்கெடுப்பின் நோக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது.

"மக்கள் தொகை கணக்கெடுப்பு தொடர்பான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்த எந்த மாதிரியான பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறீர்கள்.

தகவல் தொழில் நுட்பம், பத்திரிகை தகவல், விளம்பரம் இதன் மூலமாகத் தான் பொது மக்களிடமும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறோம். மக்கள் தொகை - கணக்கெடுப்பு அதிகாரிகள் அதிகார அட்டைகளுடன் உங்கள் இல்லத்தைத் தேடி வரும்போது, உங்கள் குடும்பங்களின் உண்மை நிலவரங்களை துல்லியமாக எடுத்துக் கூறலாம். இந்த ஆய்வின்போது, குடும்ப உறுப்பினர்கள்,அடையாளக்கார்டு எண், பிறந்த தேதி, திருமண அந்தஸ்து, குடியிருப்பு விவரம்,( சொந்த வீடா , வாடகை வீடா) மின்சாரம் மற்றும் தண்ணீர் வசதி, கழிவறை வசதி, மாத வருமானம், தொழில், கல்வித் தரம், பிள்ளைகளின் கல்வி நிலை குடியுரிமை விவரம், கணினி, தொலைக்காட்சி, ரேடியோ, கார், மோட்டார் சைக்கிள் இது போன்ற அனைத்து புள்ளி விவரங்களும் அதிகாரிகள் சேகரிப்பர். ஆகவே



குலமகள்

மக்கள் என்னவோ ஏதோ என்று அச்சம் கொள்ளத் தேவையில்லை இது போன்ற இந்த ஒட்டு மொத்த ஆய்விற்குப் பின், மாநில ரீதியில் இந்தியர்களின் மக்கள் தொகை புள்ளிவிவரம் வாழ்வாதாரம், வறுமைநிலை, கல்விநிலை போன்ற பிரச்னைகள் ஆராயப்படும்.



பிரேமா

இதன் மூலம் மலேசிய இந்தியர்களின் இன்றைய உண்மை நிலையைப் பற்றிய விவரங்கள் தக்க துறைகளிடம் கலந்து ஆலோசிக்கப்படும். இதன் தொடர்பாக நடத்தப்படும் புள்ளி விவரங்கள் அனைத்தும் 1960 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புத் திட்டத்தின் கீழ் ரகசியமாக பாதுகாக்கப்படும். ஆகவே மக்கள் பயப்படத் தேவையில்லை. உண்மை நிலையை மறைக்கவும் தேவையில்லை.

மலேசியாவில் இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பு எப்போது துவங்கியது?

இதற்கு முன் 1970ஆம் ஆண்டு முதல் கணக்கெடுப்பும் இரண்டாவது கணக்கெடுப்பு 1980 ஆம் ஆண்டும், மூன்றாவது 1991ஆம் ஆண்டும் மற்றும் நான்காவது 2000ஆம் ஆண்டும் நடத்தப்பட்டது. தற்போது ஐந்தாவது கணக்கெடுப்பாக இவ்வாண்டு நடத்தப்பட உள்ளது. இந்தக் கணக்கெடுப்பு என்பது ஒவ்வொரு 10 ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்பட வேண்டும். இது நாட்டின் 5ஆவது மக்கள் தொகை கணக்கெடுப்பாகும்.

இதன் ஆரம்ப நிலவரம் வரும் நவம்பர் 2010-இல் வெளியிடப்படும்.

இந்நிகழ்வில் இந்தியர்களுக்கான சிறப்பு அமலாக்க அமைச்சரவை செயற்குழு செயலாளர் டத்தோ டாக்டர் டெனிசன் ஜெயசூரியா, தகவல்துறை அதிகாரிகள் தனபாலன், குலமகள் மற்றும் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பிரிவின் துணை இயக்குநர்கள் துரைராஜு, பிரேமா, பொதுஉறவு அதிகாரி கு ஆசியான் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.



கு ஆசியான்

இது தொடர்பாக மேலும் விவரம் அறிய விரும்புபவர்கள் 1-800-88-7828 அல்லது www.statistics. gov.my எனும் இணைய முகவரியில் தொடர்பு கொள்ளலாம்.

- பத்மினி ராஜமாணிக்கம்